முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1571

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.01.2024, புதன்கிழமை

1. ஆறுமுக சக்தியே அரங்கா
அன்னதான வள்ளலே தேசிகா
மாறுதலைச் செய்யவந்த குருராஜா
மாதவசியே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
உரைத்திடுவேன் சோபகிருது கலை திங்கள்
(சோபகிருது வருடம் தை மாதம் 03 ம் நாள், 17.01.2024, புதன்கிழமை)
ஞானவான்கள் படை உன்னுள் கலந்து
ஞானயுகம் படைக்க இருக்க
3. இருக்கவே அரங்கன் உன் தர்மமே
இந்த உலகத்தைக் காத்து வழிநடத்தும்
கருத்தாக அரங்கன் உன் ஞானமே
கலியுகத்தில் உலகோர்க்கு ஞான சித்தி தரும்
4. தருகின்ற குணம் படைத்த உன் தொண்டர் படைகளெல்லாம்
தரணிக்கு மாற்றம் தந்து இனிதே
வருகின்ற காலம் ஞானசித்தர் காலமாக
வையகத்தார் எல்லாம் ஞானவான்களாக மாறி
5. மாறியே ஞானிகள் ஆட்சி
மனிதர்கள் ஆட்சிக்கு முடிவுகண்டு
ஞானிகள் ஆட்சியே உதயமாகும் வண்ணம்
நாட்டிடுவேன் அற்புதங்கள் கலியினில் நடந்தேறும்
6. நடந்தேற ஆக்கத்தை ஆறுமுகன் யான்
நாட்டிடுவேன் நாளும் நாளும் உமக்கு சக்தியூட்டி வரமாக அருளிவர
சலனமற உன்வழி தொண்டர்படை இன்னும் பெருகப்பெருக
சகல திக்கிலும் அரங்கன் உன் தர்மம் இன்னும் வளரவளர

7. வளரவே இந்த அற்புதம்
வையகம் சடுதி கண்டு
சலனமற அரங்கன் தொண்டர்கள் மகிழும் வண்ணம்
சாற்றிடுவேன் சடுதி அரங்கன் அவதார நோக்கம் பூர்த்தியாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—